மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.62/2023</u>

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 11ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராசு | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>11.07.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 27.12.1985 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள ஏ அட்டவணை சொத்துக்கள் தான் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் பிரதிவாதிக்கு சி அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் ஒரு பொது கிணறு உள்ளது அதில் அனைத்து பாகஸ்தர்களும் ஒட்டி வருகிறோம் என்றால் சரிதான். எனது நிலத்திற்கு தனிப்பட்ட முறையில் போர்வெல் உள்ளது என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினையில் பி அட்டவணை சொத்துக்கள் ஒரு பழனிச்சாமி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது.

2. மேற்படி பொது கிணற்றில் மின்சார மோட்டார், மின் இணைப்பும் உள்ளது என்றால் ஆமாம். அந்த மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் மூன்று பேர் பெயரில் உள்ளது உள்ளது. மின் இணைப்பு

மூன்று பேர் பெயரில் உள்ளது என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகப்பிரிவினையில் பி அட்டவணை சொத்துக்களாக பழனிச்சாமி என்பவருக்கு ஒதுக்கப்பட்ட பூமிகளையும் பின்னிட்டு நான் கிரயம் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். பொது கிணற்றில் உள்ள மின் இணைப்பு பழனிச்சாமி என்பவர் பெயரில் மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது பூமியில் ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது என்றும் அதிலிருந்து நீர் பாசனம் செய்வதற்காக தாவா பொதுக்கிணற்றில் உள்ள மின் இணைப்பில் இருந்து நான் சேஞ்ச்ஓவர் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

3. அதைப்போல் பிரதிவாதியும் தாவா பொது கிணற்றிலிருந்து சேஞ்ச் ஓவர் வசதி பெறுவதற்காக விண்ணப்பம் செய்த போது நான் அதை தடுத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பி பாகச் சொத்துக்களையும் நான் கிரையம் பெற்று விட்ட காரணத்தினால் பிரதிவாதியை தாவா பொதுக் கிணற்றிலிருந்து நீர் ஓட்டக்கூடாது என்று சொல்லி நான் இடைஞ்சல் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியை இடைஞ்சல் செய்வதற்காகவே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டு இந்த வழக்கு நிலுவையில் இருப்பதாக சொல்லி அவரை மீண்டும் இடைஞ்சல் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொதுக்கிணற்றில் உள்ள மின் இணைப்பில் இருந்து பிரதிவாதி சேஞ்ச் ஓவர் மின் இணைப்பு பெற்றுக் கொள்ள எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையா என்று சொன்னால் ஆட்சேபனை உள்ளது ஒரு கிணற்றிற்கு ஒரு சேஞ்ச்

ஓவர் தான் கொடுப்பார்கள் அவ்வாறு கொடுக்கப்படும் ஒரு சேஞ்ச் ஓவரில் இருந்து பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட ஒரே நாளில் அவர் நிலத்திற்கு நீர் இறைத்து கொள்ள எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

4. பொது கிணற்றிற்கு மட்டும் ஒட்டிக்கொள்ள எனக்கு ஆட்சேபனை இல்லை எனது நிலத்தில் உள்ள ஆழ்துளை கிணறு எனது செலவில் அமைக்கப்பட்டது அதில் பிரதிவாதியும் ஒட்டிக்கொள்ள எனக்கு ஆட்சேபனை இல்லை நான் பொது கிணற்றிலிருந்து பிரதிவாதியை நீர் ஓட்டக்கூடாது என்று சொன்னதால் பிரதிவாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.07.11 19:04:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்